Om

# Dwadasopanishad

*With copious extracts from Sri Sankara's Commentaries.*

[illegible]

*Tamil Translation*

# II. Taiteriyopanishad.

Published

by

**N. S. RAJARAMIYER**

[illegible] SINNAYA Press – Pondicherry

*All Rights Reserved*

**1911**

# (II) யஜுர்வேதம்.

## (க்ருஷ்ண யஜுர்வேதம்).

2. தைத்திரீயோபநிஷத்.

3. கடோபநிஷத்.

4. ச்வேதா ச்வதரோபநிஷத்.

## (சுக்ல யஜுர்வேதம்).

5. ஈசோபநிஷத்.

6. பிரகதாரண்யக உபநிஷத்.

ஓம்.

ஓம் தத்ஸத்.

# க்ருஷ்ண யஜுர்வேதீய

# தைத்திரீயோபநிஷத்.

---

## சாந்தி.

இவ்வுபநிஷத்தின் முதல் வல்லி முதல் அநுவாகமே இதற்குச் சாந்தியாகும்

---

**ஸ்ரீ சங்கர பாஷ்ய பாதீகச் சுருக்கம்.**— *துரித க்ஷயார்த்தங்களாக விருக்கின்ற நித்திய கர்மங்களைப்பற்றியும், காமியார்த்தங்களா யிருக்கின்ற நைமித்திகக் கர்மங்களைப்பற்றியும், கர்மகாண்டத்தில் கூறப்பட்டிருக்கின்றது. கர்மங்களுடைய பலன் சம்சாரமே இந்தப் பலத்தில் சுக துக்கங்கள் இரண்டுமிருக்கின்றன. நித்திய சுகம் வேண்டுமாயின் கர்மங்கள் போதா ஆதல் பற்றிக் கர்மங்களுக்கு ஹேதுவா யிருப்பதை நிவர்த்தி செய்யும் பொருட்டு இப்பொழுது பிரம வித்தையைப்பற்றி இங்கு பேசப்படுகிறது. கர்மத்துக்கு ஹேது காமம்—இச்சை. இச்சையே கர்மஞ் செய்யும்படி தூண்டுகிறது. இச்சை யில்லாதவனுக்குப் பிரவிர்த்தி யில்லை. மற்றப் பதார்த்தங்களில் ஞாபகம் வைக்காமல் தன்னிடத்திற்றனே யிருக்கின்றான்.*

*தன் ஆத்மாவையறிய விரும்பினாற்றான் மற்ற விஷயங்களில் விருப்ப மற்றுப்போகும். தன் ஆத்மா என்றது பிரமம். அதை யறிந்தவன் உத்தம மான கதியை யடைகிறான். ஆகையால் அவித்தையைத் தள்ளித் தன்னிடத்திலேயே தானிருப்பது பரப் பிராப்தி என்றது. காமியங்களாகவும், பிரதிஷித்தங்களாகவு மிருக்கிற கர்மங்களை ஆரம்பிக்காமலும், அங்ஙனம் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி கர்மங்களுடைய பலனை அனுபவித்து தீக்கும்படி செய்தும், விரோதத்தைப் பயக்காத நித்திய கர்மங்களை அநுஷ்டானஞ் செய்துகொண்டு மிருந்தால் யாதொரு முயற்சியு மில்லா*

மலே ஸ்வாத்மந் யவஸ்தானம் (தன்னிடத்திற்றானிருத்தல்—பிரவிர்த்தியில்லாமை) உண்டாகும். அது மோக்ஷம். கர்மத்தால் சுவர்க்கச் சுகங்கிடைப்பதால் அதனால் மோக்ஷம் உண்டாகிறதென்று கூறுதலமையாது. ஏனெனின், கர்மங்களுள் பலவித முண்டு; அவைகளின் பலன்களும் அங்ஙனமே. அனேக ஜன்மாந்தரங்களில் செய்யப்பட்ட கர்மங்களின் விருத்த பலன்கள், ஒரே ஜன்மத்தில் அனுபவிக்கப்படுவதனால் தொலையா. அதாவது, கர்மங்கள் மேன்மேலுஞ் செய்யப்படின், பலன்களும் அங்ஙனமே விர்த்தியாகும். முடிவு காலஞ் சம்பவிக்காது. அந்தந்த கர்மத்தின் பலனை அந்தந்த நிமித்த சரீரங்கள் உண்டாக்கிக்கொண்டே வரும். அதாவது ஜனன மரணங்கள் முடிவின்றிச் சம்பவிக்கும். அப்பொழுது மோக்ஷம் சித்திக்காது. நித்திய கர்மங்கள் ஆரப்த கர்ம பலன்களை நிவர்த்தி செய்யமாட்டா. அநாரப்த பல கர்மங்களை அழிக்கவுமாட்டா. ஆகல்கொண்டே நித்திய கர்மங்கள் மோக்ஷத்துக்குப் போதாவாம். ஞானமில்லாவிடின் கர்ம ஹேதுக்களா யிருக்கிற காமங்களுக்கு ஒழிவு நேரிடாது. ஆத்மாவை அறியாதவனுக்குக் காமம் இருந்துகொண்டே யிருக்கும். தன் ஆத்மாதான் பரப்பிரமம். மோக்ஷ சாதனமாக விருக்கவில்லையென்று கருதி நித்திய கர்மங்களைச் செய்யாமலிருக்கவுங்கூடாது. செய்யாவிடின் கெடுதியுண்டு. உலகத்தில் எதற்கு ஆரம்பமுண்டோ அது நசிக்கும். ஆதலால் கர்ம ஆரம்பத்தினால் மோக்ஷமுண்டாகாது விக்கையுடன் கூடின கர்மங்களுக்கு நித்திய மோக்ஷாரம்ப ஸாமர்த்தியமுண்டென்பது அமையாது இது முற்றும் விரோதம்; ஆரம்பமுள்ளதற்கு நித்தியத்துவமில்லை மோக்ஷம் ஆரம்பம் என்று கூறுதல் பொருந்தாது ஏனெனின், மோக்ஷம் பாவ ரூபமுள்ளது (எப்பொழுது முள்ளது). இல்லாதது உண்டானால் அது ஆரம்பம் என்று சொல்லாம். ஆகல்பற்றி அவித்தியா காம கர்மோபாதான ஹேது நிவர்த்தியானால் ஸ்வாதமந் யவஸ்தானமென்ற மோக்ஷம் சித்திக்கும். தன் ஆத்மாவே பிரமம்; அதை யறிந்தாற்றான் அவித்தியா நிவர்த்தி யுண்டாகும்; அவ்விதம் வித்தையை உபதேசிப்பதற்காகவே உபநிஷத் பிரவிர்த்தித்தது. பிரமத்தின் சமீபத்தில் கொண்டுபோய்ச் சேர்ப்பதால் உபநிஷத் என்ற நாமஞ் சித்தித்தது.

# சீக்ஷாவல்லீ

என்ற

# முதல் அத்தியாயம்.

---

## அநுவாகம் I.

(வித்தியார்த்தியாகிய சிஷ்யன் தொடக்கத்தில் பிரார்த்தித்துக்கொள்ளுகிறதாவது): — எங்களுக்கு (எனக்கும், குருவுக்கும்) (பிராண விர்த்திக்கும், பகலுக்கும் அபிமான தேவதையாயிருக்கிற) மித்திரனும் (சூரியனும); (அபான விருத்திக்கும், இரவுக்கும் அபிமான தேவதையாகிய) வருணனும்; (நேத்திரத்திலும், ஆதித்ய மண்டலத்திலும் அபிமான தேவதையாகிய) அர்யமாவும் (சூரியனும்); (பலத்தில் அபிமான தேவதையாகிய) இந்திரனும்; (வாக்கிலும், புத்தியிலும் அபிமான தேவதையாகிய) பிரஹஸ்பதியும்; (பாதங்களில் அபிமான தேவதையாகிய) விஸ்தீரணக் கிரமமுள்ள விஷ்ணுவும், சுகத்தைக் கொடுக்கட்டும். பிரமத்தின் பொருட்டு நமஸ்காரஞ் செய்கிறேன். ஹே, வாயுவே! (பிராணனே) உமக்கு நமஸ்காரம். நீரே பிரத்தியக்ஷமாயிருக்கிற பிரமம். உம்மையே அவ்விதஞ் சொல்லப்போகிறேன். நீரே, ரிதம் (ருஜுமார்க்கம், சாஸ்திரபபடி கிரமமாக விநததல்). நீரே சத்தியம். சர்வாத்மகமான மேற்படி வாயுவென்று பெயருள்ள பிரமமானது என்னையுங் குருவையும் ரக்ஷிக்கட்டும். (ஓம் சாந்தி என்று மூன்று தடவை கூறுவதின் பயன் யாதெனின், வித்தியா பிராப்திக்கு அத்தியாத்மக, அதிபௌதிக, அதிதைவிகங்களாயிருக்கிற விக்னங்கள் ஒழிவுறட்டுமென்று).

---

## அநுவாகம் II.

இனி சீக்ஷாத்தியாயம் (உபநிஷத்துக்கு அர்த்தஞானம் பிரதானமானபடியால் அதை யறிந்துகொள்வதற்காக வர்ணாதி உச்சார லக்ஷணமுள்ள சாஸ்திரம்) கூறப்படுகிறது.

காதுகள் மிகுந்த பொருள்களைக் கேட்கட்டும்; ஹே, ஓம்காரமே! நீ பிரமத்துக்குப் பிரதீகமாக (விக்ரகமாக) இருக்கின்றனை; லௌகிகப் பிரக்ஞையால் மூடப்பட்டிருக்கிறாய். ஆத்ம ஞானார்த்தம் நான் கேட்டிருப்பதை ரக்ஷி. (கேட்டதை மறவாமலிருக்கச்செய்)."

2. ஸ்ரீ காமன் செய்யும் ஹோமமாவது: "எந்த ஸ்ரீயானவள் (சம்பத்தானது) எனக்கு வஸ்திரங்களையும், கோக்களையும், அன்னபானாதிகளையுஞ் சீக்கிரமாகத் தருவித்துக் கொடுக்கின்றனவோ, விஸ்தாரமாகச் செய்து கொடுக்கின்றனவோ, அந்த ஸ்ரீயைப் பசு முதலியவைகளுடன் எனக்குக் கொடு."

(இங்கு "ஸ்வாஹா"வென்று ஹோமஞ் செய்யுங்கால் சொல்லப்படுகிறது).

"ப்ரமசாரிகள் (பிரம வித்துக்கள்) என்னிடம் அணுகட்டும். (அதாவது அவர்களை நான் தரிசனம் பண்ணும்படி செய்குக); அவர்கள் விசேஷமாக வரட்டும்; அவர்களதிகமாக வரட்டும்; (அதாவது அனேகம் பெரியோர்களை நான் பார்க்கட்டும்); அவர்கள் என்னை தமப்படுத்தட்டும்; (பஹிரிந்திரிய நிக்ரஹனாக என்னைச் செய்யட்டும்); அவர்கள் என்னை சமப்படுத்தட்டும் (அந்தரிந்திரிய நிக்ரஹனாகச் செய்யட்டும்).

3. "ஜனங்களுக்குள் யசஸ்வியாக நான் ஆகட்டும்; மஹாதைசுவரியவானாக நானாகட்டும்; உன்னிடத்தில் நான் பிரவேசிக்கின்றேன்; நீ என்னிடம் பிரவேசி, அதாவது உன்னிடத்தில் நான் ஐக்கியப்படட்டும்; மிகவும் பேதமுள்ள உன்னிடத்தில் சோதிக்கின்றேன்; (என் பாபத்தைப் போக்கடிக்கின்றேன்). எவ்விதம் உலகத்தில் பள்ளங் கண்டவிடத்தில் ஜலம் போகுமோ, (ஜனங்களை ஜரைக்குட்படுத்தி) எப்படி மாசங்கள் (காலஞ்) செல்லுகின்றனவோ, அவ்விதம் நான்கு திக்குகளிலுமிருந்து பிரமவித்துக்கள் என்னிடம் வரட்டும். எல்லாத் துக்க பாபங்களையும் நாசஞ் செய்யக்கூடிய ஸ்தானமாக விருக்கின்றாய்; ஆதலால் என்னைப் பிரகாசப்படுத்து; என்னை வந்தடை, எனக்கு அனுக்கிரகஞ் செய்."

## அநுவாகம் V.

**முன் அநுவாகத்தில் பிரமத்தினுடைய பிரணவ சரீரஞ் சொல்லப்பட்டது. இப்பொழுது ஹிரண்ய கர்ப்பமென்ற வியாஹிருதி சரீரங் கூறப்படுகிறது. அதாவது வியாஹிருதி யாத்மாவான பிரமத்தினுடைய அந்தருபாஸனம் எடுத்துரைக்கப்படுகிறது.**

1-3. பூ: பூலோகம், புவ: அந்தரிக்ஷம், ஸுவ: ஸ்வர்க்க லோகம். இம்மூன்றும் வியாஹிருதிகள். மஹ என்றது நான்காவது வியாஹிருதி; அதாவது பிரமம். இப்படி மூன்று வியாஹிருதிகளைச சரீரமாகப் பெற்றவர்; அவரே ஆத்மா, சர்வ வியாப்தியுள்ளவர். இந்த நான்காவது வியாஹிருதியை மஹா சமஸ்யரென்றவர் கண்டறிந்தவர் (ரிஷி ஸ்மரணம் உபாஸனைக்கு வேண்டியதென்று மேற்படி ரிஷியைப்பற்றி இங்கு பிரஸ்தாபிக்கப்பட்டது).

பூ:—இந்த லோகம். புவ:—அந்தரிக்ஷம், ஸுவ:—அந்த லோகம்—சுவர்க்கம், மஹ:—ஆதித்யன். ஆதித்யனால் எல்லா உலகங்களும் மகிமையை அடைகின்றன, பிரகாசிக்கின்றன—அதாவது மூன்று உலகங்களைக் காட்டிலும் ஆதித்யன் பெரிது. பூ:—ருக் வேதம்; புவ:—சாம வேதம்; ஸுவ:—யஜுர் வேதம்; மஹ:—பிரமம் (பிரணவம்); பிரணவத்தினால் சர்வ வேதங்களும் மகிமையடைகின்றன. பூ:—அக்நி, புவ:—வாயு, ஸுவ:—ஆதித்யன், மஹ:—சந்திரன், சந்திரனால் எல்லா ஜோதிகளும் மகிமையை அடைகின்றன. பூ:—பிராண வாயு, புவ:—அபான வாயு, ஸுவ:—வியான வாயு, மஹ:—அன்னம், அன்னத்தினால் சகல பிராணன்களும் மகிமையை அடைகின்றன. இவையே நந்நான்கு வியாஹ்ருதிகள். இவைகளை அறிந்தவனே பிரமத்தை அறிந்தவன்-ஸ்வராஜ்யத்தை அடைந்தவன்; இத்தகைமை வாய்ந்தவனுக்குத் தேவர்கள் பலி, கப்பங் கொண்டுவந்து படைப்பார்கள். அதாவது தேவர்கள் இவனுக்கு வேண்டியவற்றை யளிப்பார்கள்.

---

## அநுவாகம் VI.

**பிரமம், ஒருவனிடத்தில் 'எந்த ஸ்தானத்திலிருந்து ஸாக்ஷாத்தாக்ப்தி பெறக்கூடியதோ, அந்த ஹிருதயாதி ஆகாச ஸ்தானமும்;**

அதன் உபாஸனையும் இங்கெடுத்து ஓதப்படுகின்றன. சாளக் கிராம சிலையில் யாங்ஙனம் விஷ்ணுவை உபாசிக்கின்றோமோ, அங்ஙனம் இனிக் கூறப் புகுந்த ஸ்தானத்தில் பிரமத்தை உபாசிக்கவேண்டியது.

1-2. உள் ஹிருதயத்தில் ஆகாச மிருக்கின்றது; தாமரைப் பூ வடிவமுள்ள ஒரு மாம்ஸ பிண்டந் தேகத்தினுள் ளிருக்கின்றது; அஃது பிராணன் இருக்குமிடம்; அநேக நாடிகளுடன் கூடிய துவாரத்தோ டிருக்கின்றது; அதற்குத் தண்டு, காம்பு மேல், முகங் கீழ். இவ்வா றமைந்த விடத்தில் ஓர் வெட்டவெளி யிருக்கின்றது; அந்த ஆகாசத்தில், மநோமயமான (விக்ஞானமயனான) புருஷன் (எல்லா லோகங்களிலும் பூரணமாக வியாபித்திருக்கின்றவன்) இருக்கின்றான்; அவன் மரண தர்மமில்லாதவன்; பிரகாசமுள்ளவன். (இவ்விதம் பிரம சுரூபத்தை யறிந்த வித்துவானுடைய ஸ்வரூப பிரதிபத்தி மார்க்கம் ஈண்டெடுத்துக் கூறப்படுகிறது.) அந்த இருதயத்துக்குமேல், சுழுமுனையென்ற நாடி செல்கின்றது; இரண்டு தாள்வாய்க்கு மிடையில் ஸ்தனம்போல் ஒரு மாம்ஸ பிண்டந் தூங்குகின்றது. (அதாவது உண்ணாக்கு); அதற்குமேல் கேசாந்தம் மூர்த்தா, உச்சந்தலை. வித்துவானுடைய ஜீவன் இருதயத்திலிருந்து மேற்கூறிய நாடி, உண்ணாக்கு, இவைகளின் வாயிலாகச் சென்று, மூர்த்தாவை யடைந்து, அவ்விடமிருந்து கபாலத்தைப் பிளந்துகொண்டு வெளிப்படுகிறது. இதுவே பிரம சுவரூப பிரதிபத்திமார்க்கம். இங்ஙனம் வித்துவான் வெளிப்புறப்பட்டு, பூ: என்ற வியாஹிருதி ரூபமாகவுள்ள அக்னியில் சேர்கிறான். பிறகு புவ: என்ற வ்யாஹ்ருதி ரூபமான வாயுவில்.

பிறகு, "ஸுவ:" என்ற வியாஹிருதி ரூபமான ஆதித்யனைச் சேருகின்றான்; அதன் பிறகு "மஹ" என்ற வியாஹிருதி ரூபமான பிரமத்தில் கலந்துபோகின்றான்; அப்பொழுது ஸ்வாராஜ்யத்தைப் பெற்றவனாகின்றான்; மனதிற்கெல்லாம் பதியாயிருக்கின்ற பிரமத்தை அடைந்தவனாகின்றான். வாக்கு, சக்ஷுஸ், ச்ரோத்திரம், விக்ஞானம் இவைகட்கெல்லாம் பதியாகின்றான். அதாவது யாவுந் தெரிந்தவனாகின்றான். இஃதன்றி மேலான

ஆகின்றான்; ஆகாசம்போன்ற ஸூக்ஷ்ம சரீரத்தையுடைய பிரம்மமாகவே ஆகின்றான்; சத்தியமாகிற மூர்த்தா மூர்த்தமாகிற ஜகத்தை ஆத்மாவாக உடையவனாகவும், பிராணன்களிடத்தில் விளையாட்டை உடையவனாகவும், மனதின்கண் ஆனந்தத்தையுடையவனாயும், பூர்ணமாய்ச் சாந்தி பொருந்தமை உள்ளவனாயும், அம்ருதனாயும் ஆகின்றான் இவ்வாறாக ஹே! ப்ராசீன யோக்ய! இத்தகைய ப்ரமத்தை நீ உபாசி (என்று குரு, சிஷ்யனுக்கு உபதேசிக்கு முறை).

---

## அநுவாகம் VII.

வியாஹ்ருதி யாத்மகமாகப் பிரமம், உபாஸ்யமென்று எடுத்தோதப் பட்டது. இப்பொழுது அந்தப் பிரமத்துக்கே பிருதிவி முதலான பாங்க்த ஸ்வரூபமாக உபாஸநம் சொல்லப்படுகிறது. "பாங்க்தம்" என்றால், "ஐந்துள்ளது" "ஐவகைப்பட்டது" என்றர்த்தம். யக்ஞம் பாங்க்தமாம், யாங்ஙனமெனில்—பத்னி, எஜமானன், தைவம், மனிதர்கள், வித்தம் இவ்வைந்தும் யஞ்ஞத்துக் குரியன; இவ்வாறு உலக முதலியன வற்றை அவ்வைந்தாகக் கற்பித்துக் காட்டி, அவ்வப் பாங்க்தமாகப் பிரஜாபதியாகிய பிரமம் விளங்குகிறதென்று சொல்லப்படுகிறது.

௧ 1. பூமி, அந்தரிக்ஷம், ஆகாயம், திக்குகள், மூலை திக்குகள், இவ்வைந்தும் லோக பாங்க்தங்களாம். அக்நி, வாயு, சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் இவ்வைந்தும் தேவதா பாங்க்தங்களாம். ஜலம், செடிகொடிகள், விருக்ஷங்கள், ஆகாசம், ஆத்மா (விராட்சுவரூபி) இவ்வைந்தும் பூத பாங்க்தங்களாம். இந்த மூன்று ஐந்துகளுக்கும் அதிபூதம் (பூத சம்பந்தமான) ஐந்துகளென்று பெயர் சொல்லப்படும். பிராண, அபாந, வியாந, உதாந, சமாந இவ்வைந்தும் வாயு பாங்க்தங்களாம். நேத்திரம், சுரோத்திரம், மனஸ், வாக்கு, த்வக்கு (உணர்தல்) இவ்வைந்தும் இந்திரிய பாங்க்தங்களாம். தோல் (மாம்சம்), ஊன், ஜலம், எலும்பு, மஜ்ஜை (எலும்புக்குள்ளிருக்கும் பசை) இவ்வைந்துந் தாது பாங்க்தங்களாம். இம்மூன்று ஐந்துகளுக்கும் அத்யாத்மம் (ஆத்ம சம்பந்தமான) ஐந்துகளென் றுரைக்கப்படும். "இவ்வாறு அவ்வைந்தாக வகுத்த இவையாவும் (புல்

படுகிற ஜகத் யாவும்) பாங்க்தமாக (அவ்வைந்தாக) விளங்கு கிறது" என்றும், "பாஹ்ய பாங்க்தமானது (அதிபூத பாங்க்த மானது அத்தியாத்மிகத்துடன் கலந்து பூர்ணப்படுகிறது" (அதா வது தெரிந்ததைக்கொண்டு அல்லது விளங்கும் என்ற நியாயப் படிக்கு, வெளிப்பட்ட பாங்க்த சுவரூபத்தைக்கொண்டு அத்தி யாத்ம பாங்க்தத்தை அறியவேண்டும்) என்றார், (வேதம் அல் லது) ரிஷி சொல்லியது. (இவ்வாறு பாங்க்த ஸ்வரூபமாகப் பிரமமாயிருக்கிறதென் றறிகிறவன், பிரஜாபதியாகவே ஆகிவிடு கின்றான்).

---

## அநுவாகம் VIII.

(இப்பொழுது சர்வோபாசனங்க பூதமாயிருக்கின்ற ஓம்காரத்தின் உபாசனம் ஈண்டெடுத்துக் கூறப்படுகிறது. ஓம்காரம் பர பிரம்மமாகப் பாவிக்கப்பட் டுபாசிக்கப்படவேண்டும். அஃது சப்தமாத்திரமா யிருந் தாலும், பராபர பிரமத்தை அடைகிறதற்குச் சாதனமாக விருக்கின்றது அது பிரமத்தின் பிடிப்பு—இருப்பிடமா யிருக்கிறது .

ஓம் என்று சப்தரூபத்தைப் பிரமமாக மனதினால் தியா னிக்கவேண்டும்; ஏனெனில், இந்த ஜகத்தெல்லாம் ஓங்கார ஸ்வ ரூபமாக விருக்கிறது. (ஓம் என்ற பதத்தால் வியாப்தமாயிருக் கிறது); மேலும் அது அநுகிருதி (அதாவது ஒருவனை ஒரு காரியத்தைச் செய்யும்படி ஏவினால், அதற்கு அவன் ஓம் என்று மறுமொழி தரின், அங்ஙனமே செய்வேனென்று அங்கீகரித் துப் பேசுதல்); ஒருவனால் விளிக்கப்பட்டவன், ஓம் என்று கேட் கிறான்; தொடக்கத்தில் ஓம் என்று சொல்லி ஸாமத்தைக் கானஞ் செய்கிறார்கள்; ஓம் என்று சொல்லிப் பின் ரிக்வேத சாஸ் திர மந்திரங்களைச் சொல்லுகிறார்கள்; யாகத்தில் அத்வர்யு ஓம் என்று பிரதிசம்ஸந்தத்தை உச்சரிக்கிறான்; பிரமா என்ற ரித்விக், ஓம் என்று உச்சரித்து அவன் காரியத்தைச் செய்கின்றான்; ஓம் என்று உச்சரித்து அக்னிஹோத்திரஞ் செய்கிறார்கள்; பிரா மணன், தொடக்கத்தில் ஓம் என்று உச்சரித்துக்கொண்டு வேதாத்தியயனஞ் செய்ய ஆரம்பிக்கின்றான்; ஓங்காரத்தினால் பிர

மத்தை யடைவோமென்று கருதுகிறவன் அங்ஙனமே பிரமத்தை யடைகிறான். (ஓம்கார பூர்வமாய்த் தொடங்கப்பட்ட கிரியைகள் யாவும் பல சித்தியை யடைவதால் ஓம்காரத்தை — பிரமமாக உபாசித்தல் இன்றி யமையாததென்பது இந்த அநுவாகத்தின் முக்கிய தாத்பரியம்).

---

## அநுவாகம் IX.

(விக்ஞானத்தினால் ஸ்வாராஜ்யமாகிற பிரபுத்துவம் வருமென்று கூறப்பட்டிருக்கின்றமையால் சிரௌத ஸ்மார்த்தங்களுக்கு அனர்த்த பாவம வருமோவென்று கருதி, அது உசிதத்தல்லவென்றும், அந்தக் கர்மங்களுக்குப் புருஷார்த்த சாதனமிருக்கிறதென்றும் இப்பொழுது நிரூபிக்கப்படுகிறது).

1. ருதம் (ருஜுவாக்கம் அதாவது சாஸ்திர ரீதியாகவும், கிரமமாகவும் நடக்கும்படியான நிச்சய புத்தி); ஸ்வாத்தியாயம் (வேதாத்தியயனம்). அர்த்த ஞானத்துடன் அத்தியயனஞ் செய்கிறது; பிரவசனம் (மறவாமலிருக்கவும் தர்ம விருத்திக்காகவும் அத்தியயனஞ் செய்தல். அல்லது பிரம யக்ஞக் கிரியை); இந்த மூன்றும் அனுஷ்டிக்கப்பட வேண்டும். சத்தியம் (சத்தியமாய் நடத்தல். பேசுதல்) கைக்கொள்ளப்பட வேண்டியது. (சத்தியம் முதற்கொண்டு ஒவ்வொன்றுடனும் "ஸ்வாத்தியாய பிரவசனங்கள் அனுஷ்டிக்கப்பட வேண்டும்" என்று கூட்டிச் சொல்லப்படுகிறது. ஏனெனில், இவ்விரண்டுங் கட்டாயம் அனுஷ்டிக்கப்பட வேண்டியமென்பதைக் காட்டும் நிமித்தம்); தபஸ் (கிருச்ராதி விரதங்கள் செய்யப்பட வேண்டும்). தம: (பாஹ்யேந்திரிய நிக்ரஹம்) செய்யப்பட வேண்டும். சம: (அந்தரிந்திரிய நிக்ரகம்) செய்யப்பட வேண்டும். அக்நிகள் (அக்நி சம்பந்தமான கிரியைகள்) செய்யப்பட வேண்டும். அக்நி ஹோத்திரஞ் செய்யப்பட வேண்டும்; அதிதிகளைப் பூஜிக்கவேண்டும்; மானுஷஞ் செய்ய வேண்டும்; (லௌகிக வியவகாரம் அதாவது விவாக முதலான காரியங்களைச் செய்யவேண்டும்); பிரஜோத்பத்தி செய்யவேண்டும்; பிரஜனம்: (பிறப்பித்தல். அதாவது ருதுகாலத்தில் பார்

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
[illegible] நிலையம்

யையி னிடத்தில் பிரவேசித்தல்) செய்யவேண்டியது; பிரஜா (பௌத்திரோத்பத்தி — புத்திரனுக்கு விவாகஞ் செய்விப்பது முதலானது) நடத்தவேண்டும்; சத்தியமே கைக்கொள்ளற்பாலது என்று 'ராதீதரர்' கருதினார். தபலே செய்யப்படவேண்டியதென்பது 'பௌருசிஷ்டி'யினுள்ளக் கிடக்கை. சுவாத்தியாயப் பிரவசனங்களை அனுஷ்டிக்க வேண்டியதென்றும், அதே தபஸ் என்றும் 'மௌத்கல்யர்' கொள்கை.

---

### அநுவாகம் X.

(இப்பொழுது ஆரம்பிக்கப்படும் ஜபமானது, பிரம வித்தியோத்பத்தி நிமித்தம் அத்தியயனஞ் செய்யப்படவேண்டிய மந்திரம்.)

1. "நான் ஸம்ஸார விருக்ஷத்தினுடைய பிரேரயிதா (அந்தர்யாமியா யிருந்து நடத்துகிறவன்); ஒரு மலையின் உச்சிபோல் என்னுடைய கீர்த்தி உயர்ந்திருக்கின்றது; பரிசுத்தமான ஞானத்தை (பிரமத்தை) மேலான காரணமாக உடையவனா யிருக்கிறேன்; சூரியனிடமிருக்கின்ற அமிருதமான ஆத்தும தத்துவம்போல் நான் ஆத்ம தத்துவமாக விருக்கின்றேன்; பிரகாசமுள்ள தனம்போன்ற ஆத்ம தத்துவமாக விருக்கின்றேன்; சோபனமான புத்தியுள்ளவனா யிருக்கிறேன்; மரண தர்மமில்லாதவனாயும், குறைவற்றவனாயு மிருக்கிறேன்" என்றது, பிரம ஞானியாகிய 'திரிசங்கு' என்ற ரிஷியின் வேதாநுவசனம், ஆத்மா ஒன்றென்னும் அறிவை அடைதற்குரிய வசனம். (இந்த மந்திரத்தைப் பிரம வித்தியார்த்திகள் ஜபிக்கவேண்டும்.)

---

### அநுவாகம் XI.

வேதாத்தியயனஞ் செய்த பிறகு சிஷ்யனுக்குக் குரு செய்யும் உபதேசக் கிரமம் இப்பொழுது சொல்லப்படுகிறது. பிரம்ம விஞ்ஞானத்துக்கு முன் சிரௌதஸ்மார்த்த கர்மங்கள் நியமமாகச் செய்யப்படவேண்டுமென்ற பொருளை யெடுத்துரைக்கப்படுகின்றது. கர்மங்களால் சம்ஸ்காரஞ் செய்யப்பட்ட சுத்த ஸத்துவமுடையவனுக்கே ஆத்தும

ஞானமுண்டாகும். இங்கு ஞானோத்பத்தி நிமித்தஞ் செய்யப்படவேண்டிய நியமம் சொல்லப்படுகிறது. உபதேசம் எவ்விதமெனில் :—

வேதாத்தியயனஞ் செய்த பிறகு குரு சிஷ்யனுக்கு உபதேசிக்கின்றார்; ஸத்தியமுரை; தர்ம வழியில் நட; அத்தியயனத்தினின்றும் நழுவுத லடையாதே (அதாவது அத்தியயனஞ் செய்யாமலிருக்காதே); குருவுக்குத் தக்ஷிணை கொடுத்து அவரிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்ட பிறகு, பிரஜை யுண்டாக்கும் நூலை அறுக்காதே. (அதாவது கல்யாணஞ் செய்துகொண்டு கிரகஸ்தாசிரமத்தில் பிரவேசியாம லிருக்காதே). ஸத்தியத்தினின்றும் நழுவுத லடையாதே; தர்மத்தினின்றும் நழுவாதே; ஆத்ம ரக்ஷணத்தினின்றும் நழுவாதே; ஐசுவரியத்தினின்றும் நழுவாதே; ஸ்வாத்தியாய பிரவசனங்களினின்றும் நழுவுத லடையாதே.

2. தேவ, பித்ரு கர்மங்களினின்றும் பிரமாதத்தை யடையாதே; மாதாவைத் தெய்வமாகப் பாவித்துக்கொண்டு உபாஸி; பிதாவைத் தெய்வமாகப் பாவித்து உபாஸி; குருவைத் தெய்வமாகப் பாவித்து உபாஸி; அதிதியைத் தெய்வமாகப் பாவித்து உபாஸி; எவை இகழப்படாதனவோ அக்கர்மங்களைச் செய்; எவை சிஷ்டாசார லக்ஷணங்களையுடையனவாயிருக்கின்றனவோ அக்கர்மங்களைக் கைக்கொள்; மற்றக் கர்மங்களைச் செய்யற்க; நன்மையுள்ள கர்மங்களைச் செய்; மற்றதைக் கொள்ளற்க.

3. எவர்கள் நமக்குள் சிரேயஸரான பிராமணர்களோ அவர்களுக்கு வேண்டிய உபசாரம் புரி; கொடுப்பதைச் சிரத்தையுடன் கொடு; அசிரத்தையுடன் கொடாதே; ஸ்ரீயுடன் கொடு; லஜ்ஜையுடன் கொடு; பயத்துடன் கொடு; ஸ்நேகத்துடன் கொடு.

4. எந்தக் கர்மத்திலாவது, விருத்தியிலாவது உனக்கு ஆசங்கை நேரிடின் அவ்விருத்தியில், கர்மத்தில், அக்காலத்துள்ள, அத்தேசத்துள்ள, யோக்கியருங் குரூர மதியற்றவர்களுமான த்விஜர்கள் யாங்ஙனம் ஒழுகுகிறார்களோ அங்ஙனமே நீயும் நட; நீ செய்த கர்மத் தோஷத்தினால் யாதேனுஞ் சார்பந்தப்பட்டிருப்பின்

அவ்விஷயத்திலும் மேற்கண்டபடி பெரியோர்கள் சொற்படி நீயும் நட; இதுவே ஆதேசம் (விதி); இதுவே உபதேசம்; இதுவே வேதோபநிஷத்; (வேத ரகசியம்); இதுவே அநுசாஸனம் (ஈசுவர வசனம்); இது இவ்விதமே உபாசிக்கப்படவேண்டியது; இதுவே உபாஸியம்.

---

### அநுவாகம் XII.

**"சந்நோமித்ர" என்றாரம்பிக்குஞ் சாந்தி சொல்லப்படுகிறது. இதன் பொருள் முதல் அநுவாகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.**

(பிரமசரிய, கிரகஸ்த, வானப்ரஸ்த, சந்நியாசம் என்ற நான்கு ஆசிரமங்களுமன்றி; ஒவ்வொரு ஆசிரமத்திலிருக்கின்றவனுக்கும் பிரம வித்தையில் அதிகாரமுண்டு. உத்தமமான சிரேயஸாகிற மோக்ஷமானது. கேவலமாயிருக்கிற வித்தையினாலேயே சித்திக்கின்றது. அதாவது கர்மத்தினாலன்று. கர்மங்களெல்லாஞ் சித்தசுத்தி நிமித்தம் என்று பாஷியகாரர் கொள்கை. பிரதிபக்ஷியையும் எடுத்து வாதித்து முடிவில் சித்தாந்தஞ் செய்திருக்கிறார்.)

---

# பிரமாநந்தவல்லீ

என்ற

## இரண்டாம் அத்தியாயம்.

### அநுவாகம் I.

(இனிக் கூறப்புகும் பிரமவித்தியா பிராப்திக் கிடையூறு நோசாவண்ணஞ் சாந்தி இங்கு சொல்லப்படுகிறது.)

எங்களைச் (சிஷியாளையும், குருவையும்) ரக்ஷணைபுரிக; எங்களுக்குப் போஜனஞ் செய்து தருக; எங்களுக்கு வித்தியா விஷயத்தில் சாமர்த்தியத்தைத் தருக; தேஜஸ்விகளான எங்களால் பிரம வித்தை அறியப்படுவதாகுக; எங்களுக்குள் ஒருவருக்கொருவர் துவேஷ புத்தி யுண்டாகாம லிருக்கட்டும்.

(கர்மங்களுக்கு விரோதமின்றியுள்ள ஸம்ஹிதா முதலியன விஷயங்களான உபாசனைகள் சொல்லப்பட்டன; உபாதியுடன் கூடின ஆத்மாவைப் பற்றியும், வியாஹிருதி மூலமாகவும் ஸ்வாராஜ்ய பல வாயிலாகவும் எடுத்துரைக்கப்பட்டது; இப்பொழுது சம்சார பீஜத்தை நாசப்படுத்த மார்க்க மிருக்கின்றது. அந்தப் பீஜமாகிற அக்ஞானத்தை யகற்றும் பொருட்டும், உபாதியற்ற ஆத்ம தர்சனத்தின் பொருட்டும் இந்த வல்லீ ஆரம்பிக்கப்படுகிறது. பிரம வித்தைக்குப் பிரயோஜனம், அக்ஞான நிவர்த்தி; பிறகு சம்சார மில்லாமை; பிரம்ம வித்தையில் பிரவிர்த்தி வரும்பொருட்டு முதலில் அதனுடைய பிரயோஜனம் எடுத்து விரிக்கப்படுகிறது).

பிரமத்தை யறிந்தவன் பர வஸ்துவை யடைகிறான். (பிரமமென்பது பிறகு சொல்லப்படுகிறது; பர வஸ்துவென்றால் பிரமந்தான்; பிரமத்தை யறிந்தவன் பிரமமாகவே ஆகிறான் என்று தாத்பரியம்). இப் பொருளில் இந்த (அடியில் கண்ட) "சத்தியம், ஞானம், அநந்தம், பிரமா" வென்ற ரிக்கு சொல்லப்பட்டிருக்கிறது; (அந்தப் பிரமம் எப்படிப்பட்டதென்றால்) சத்தியமாயும், ஞானமாயும், அனந்தமாயும் இருக்கின்ற எந்த வஸ்துவுண்டோ அதுதான் பிரமம்.

(சத்தியமெனின், எந்த வஸ்து எந்த ரூபமாக நிச்சயிக்கப்படுகிறதோ அந்த ரூபம் மாறுதலடையாமலிருந்தால் அந்த வஸ்து சத்திய வஸ்து; அதாவது எக்காலத்தும் எவ்விதத்தும் மாறாமலிருக்கின்ற வஸ்து. ஞான மென்றால், அறிவான வஸ்து. அநந்த மென்றால், எது ஓரிடத்திலும் பிரிக்கப்படாம லிருக்கின்றதோ அந்த வஸ்து; அதாவது, எது காலத்தினாலாவது, தேசத்தினாலாவது, வஸ்துவினாலாவது அளக்கப்படாமல், அளவற்றதாயும் முடிவற்றதாயு மிருக்கிறதோ, அந்த வஸ்து).

இந்தப் பிரமம், மேலான ஆகாசத்தில் (இருதயாகாசத்தில்) இருக்கிற குகையில் (புத்தியாகிற துவாரத்தில்) இருக்கின்றதாக எவன் அறிகின்றானோ, அவன் அந்தச் சர்வக்ஞனை பிரம ரூபத்துடன் (பிரம ஸ்வரூபமாகவே ஆகி) எல்லா போக்கியங்களையும் அனுபவிக்கின்றான். இப்படிப்பட்ட பிரமமாகிற ஆத்மாவினிடத்தினின்றும், சப்த குணமுள்ளதும், மூர்த்தத் திரவியங்களுக்கு இடங்கொடுக்கிறதுமான, ஆகாயம் (வெளி) உண்டாயிற்று. அந்த ஆகாயத்தினின்றும், சப்தம், ஸ்பரிசம் இவ்விரண்டு குணங்களுடைய வாயு (காற்று) உண்டாயிற்று. அந்த வாயுவினின்றும், சப்தம், ஸ்பரிசம், ரூபம் இம் மூன்று குணங்களையுடைய அக்கி (நெருப்பு) உண்டாயிற்று; அந்த அக்கியினின்றும், சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம் இந்த நான்கு குணங்களுடைய அப்பு (ஜலம்) உண்டாயிற்று; அப்புவினின்றும் சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம், கந்தம் இவ் வைந்து குணங்களுடைய பிருதிவி (பூமி) உண்டாயிற்று; பிருதிவியினின்றும் ஓஷதிகள் (மரம், செடி, கொடி முதலியன) உண்டாயின; ஓஷதிகளினின்றும் அன்னம் (உண்ணப்படுகிற வஸ்துக்கள்) உண்டாயிற்று; அன்னத்தினின்றும், ரேதஸ் (புருஷ வீரியம்) உண்டாயிற்று; அவ் வீரியத்தினின்றும், புருஷன் (தலை, கை, கால் முதலியன அவயவங்களோடு கூடியிராநின்ற மனுஷிய பிராணி) உண்டானான்; அத் தகைய விப்புருஷன் அன்னரசமயனா யிருக்கின்றவன். அவனுக்கு இந்தச் சிரஸே சிரஸ், இந்த வலது கை, வலது சிறகு அல்லது பக்கம்; இந்த இடது கை, இடது சிறகு அல்லது பக்கம் இந்த மத்திய தேகபாகம், ஆத்மா (மத்திய பாகம்); இது (நாபிக்குக் கீழுள்ள பாகம்), வால் (பின்

பக்கம்). இவ்விஷயத்தில் இந்த (அடியில்கண்ட) சுலோகம் சொல்லப்பட்டிருக்கிறது.

(இனிச் சொல்லப்படப்போகிற பிராணாதிகளுக்குச் சிரஸ், பக்கம் முதலாயின என்று கற்பிதமாய் வர்ணிக்கப்படுவதுபோல், இந்த ஸ்தூல சரீர புருஷனுக்கும், (அன்னமயகோசத்துக்கும்) வர்ணிக்கப்பட்டது).

---

## அநுவாகம் II.

"பிருதிவியை ஆசிரயித்துக்கொண்டிராநின்ற பிரஜைகளெல்லாம் அன்னத்தினின்றும் உண்டாயின; அன்னத்தினாலேயே உஜ்ஜீவிக்கின்றன; முடிவில் அன்னத்தையே அடைகின்றன. வனெனில் எல்லா பூதங்களுக்கும் அன்னம் பிரதானமாக விருக்கின்றது (காரணமாயிருக்கின்றது); ஆதல்பற்றி அது எல்லோருக்கும் ஔஷதம் (மருந்து)" (என்பது சுலோகத்தின் பொருள்). "எவர்கள் அன்னத்தைப் பிரமமாக அதாவது நாம் அன்னத்திலிருந்து உண்டானோம், அதனால் பிழைத்திருக்கின்றோம், அதிலேயே செல்லப்போகிறோம" என்று கருதி, உபாசிக்கின்றார்களோ, அவர்கள் எல்லா அன்னத்தையும் அடைகின்றார்கள். (ஸ்தூல சரீரம் பிரமமல்ல. அங்ஙனம் நினைத்தால் அன்னம் மாத்திரம் கிடைக்கும், வேறு மோக்ஷாதிபலம் கிடைக்காதென்பது பொருள்).

எது உண்ணப்படுகின்றதோ, அல்லது எதைப் பூதங்கள் உண்கிறதோ அது அன்னமென்று பெறப்படுகிறது. (அன்னமயம் முதல் ஐந்து கோசங்களையுந் திட்டிக் காட்டி, இவைகள் அக்ஞானத்தால் ஆத்மாவாகக் கற்பிக்கப்படுகின்றனவே யன்றி உண்மையாக வில்லையென்றெடுத்து விஸ்தரிக்கவேண்டியதற்காக, மேன்மேலும் பிராணமயாதி கோசங்கள் எடுத்துச் சொல்லப்படுகின்றன). இந்த அன்னமயத்தைக் காட்டிலும் வேறாயும் உள்ளிருப்பதாயு முள்ள பிராணமய ஆத்மா (தேகம், கோசம்) இருக்கிறது; இந்தப் பிராண மயத்தினால் (துருத்தி வாயுவினாற்போல்) அன்னமய சரீரம் நிரம்பியிருக்கிறது; அது, பிராணமய சரீரம். இந்தப்படி புருஷாகிருதியை அடைந்திருக்கிறது; யாங்

ஙணமெனில், அன்னமயத்தினுடைய ஆகிருதியை அனுசரித்திருக்கிறது; (அதாவது சொந்தத்தில் வடிவமில்லை); (அதற்கு, இந்தப்படி சிரஸ் முதலியன கற்பிக்கப்படுகின்றன). பிராணவாயு—சிரஸ்; வியானவாயு—வலதுபக்கம்; அபானவாயு—இடதுபக்கம்; ஆகாசமென்ற சமானவாயு—மத்தியபாகம்; பிருதிவி என்ற உதானவாயு—அடிப்பக்கம். இவ்விஷயம் மேற்கூறப் புகும் சுலோகத்தால் நன்கு விளங்கும்.

---

## அநுவாகம் III.

"தேவர்கள் (அக்நி முதலியன; அத்தியாத்மமாகப் பொருள்படும் பொழுது, இந்திரியங்கள்), பிராணனை யனுசரித்து (வாயுவாக இருந்து) தத்தந் தொழிலை நடத்துகின்றன; (அதாவது வாயு வம்சம இராவிடின் தத்தந் தொழில் நடைபெறாது); மேலும் மனிதர்களும், பசுக்களும் பிராணனைக்கொண்டு பிழைத்திருக்கின்றார்கள்; பிராணன் பிராணிகளுடைய ஆயுள்; ஆதல் பற்றி அது எல்லோருடைய ஆயுளாகச் சொல்லப்படுகிறது" என்பது. பிராணனை இவ்வாறறிந்து யார் உபாசிக்கின்றனரோ அவர்களுக்குப் பூர்ணாயுளுண்டு (அபமிருத்தியுவில்லை). இந்தப் பிராண மயகோசம், முந்தின அன்ன மயத்தின் சரீர சம்பந்தமான ஆத்மா. இந்தப பிராண மயத்தைக காட்டிலும் வேறாயும் அந்தர்க்கதமாயுமுள்ள மனோமயகோச மிருக்கிறது; இதனால் முந்திய பிராணமயம் நிரம்பியிருக்கிறது; இதனுடைய ஆகிருதி முந்தியதைத அனுசரித்திருக்கிறது; இதற்கு யஜுர் வேதம்—சிரஸ்; ரிக்கு வேதம்—வலதுபக்கம்; ஸாம வேதம்—இடதுபக்கம்; ஆதேசம்—(வேதத்திலுள்ளதோர் விசேஷ பாகம்) மத்திய பாகம்; அதர்வண வேதம்—அடிப்பக்கம்; இவ்விஷயமாக அடியிற்கண்ட சுலோகஞ் சொல்லபபடுகிறது.

---

## அநுவாகம் IV.

"எதைக் கடக்கமுடியாமல் வாக்குகள் மனதுடன் திரும்பி வந்துவிட்டனவோ அந்தப பிரமத்தினுடைய ஆநந்தத்தை யறிந்

தவன் எவ்விதத்தும் பயப்படமாட்டான் ” என்று; இந்த மனோமயகோசம் முந்திய பிராணமயத்தின் சரீர சம்பந்தமான ஆத்மா. இதைக் காட்டிலும் வேறாயும் அந்தர்க்கதமாயுள்ள விக்ஞானமய கோசமிருக்கிறது. இதனால் முந்திய மனோமயம் நிரம்பியிருக்கிறது. இதன் ஆகிருதி முந்திய தன் வடிவை அனுசரித்ததாகும்.

இதற்குச் சிரத்தை-சிரஸ்; (அதாவது விக்ஞானத்துடன் கர்மஞ் செய்யவேண்டும்; அக் கர்மத்துக்குச் சிரத்தை முக்கியம்; ஆதல்பற்றியே சிரத்தை சிரம்போல் முதன்மையாகவிருக்கிறது); ரிதம்-வலது பக்கம்; சத்தியம்-இடது பக்கம்; யோகம் (புத்தி, அல்லது சமாதானம்)-மத்தியபாகம்; மஹஸ்தத்துவம் (பரபிரமத்திடமிருந்து முந்தி உண்டான தத்துவம்)-அடிப்பக்கம், (விக்ஞானிகளுக்குக் காரணம்). இவ் விஷயமாகப் பின்வரும் சுலோகங் கூறப்படுகிறது.

---

### அநுவாகம். V.

“விக்ஞானமுள்ளவன் யக்ஞத்தைச் செய்கின்றான்; மற்றக் கர்மங்களையுஞ் செய்கின்றான்; தேவர்கள் விக்ஞானத்தைத் (தொடக்கத்திலுண்டான விக்ஞானத்தைப்) பிரமமாக உபாசிக்கிறார்கள்; அவ்வித மறிந்தவன் பிரமாதத்தை யடையமாட்டான்; பாபங்களை யெல்லாம் போக்கடித்து எல்லாக் காமங்களையு மடைவான்” என்று.

இது முந்தின மனோமயத்தின் சரீர சம்பந்தமான ஆத்மா. இதைக் காட்டிலும் வேறாயும் அந்தர்க்கதமாயுமுள்ள, ஆனந்தமய கோசமிருக்கிறது. இதனால் முந்திய விக்ஞானமயகோசம் நிரம்பியிருக்கிறது. இதன் ஆகிருதி முந்திய தன் வடிவை அனுசரித்திருக்கிறது; இதற்குப் பிரியம் (ஒரு வஸ்துவைப்பற்றும் ஆசை)-சிரஸ் (ஆனந்தத்துக்குப் பிரியம் முக்கியமா யிருப்பதால் சிரஸ்போல முதன்மையானது); மோதம் (வஸ்து லாபத்தினால் உண்டாகுஞ் சந்தோஷம்)-வலது பக்கம்; பிரமோதம் (அதி சந்தோஷம்)-இடது

பக்கம்; ஆனந்தம் (சுகானுபவம்)—மத்தியபாகம்; பிரமம் (இவைகளுக்குக் காரணமாயிருக்கின்ற பரபிரம வஸ்து)—அடிப்பக்கம்; இவ்விஷயமாய் இனி கூறப்படுஞ் சுலோகம் அமைந்திருக்கின்றது.

---

### அநுவாகம் VI.

"பிரமத்தை இல்லையென்றறிகிறவன், அஸத்தாக (அஸாதுவாக) இருக்கிறான்; உண்டு என்று நினைக்கிறவன் ஸத்தாக (ஸாதுவாக) இருக்கிறான்" என்று.

இது முந்தின விக்ஞானமயத்தினுடைய சரீர சம்பந்தமான ஆத்மா. பிறகு: இப்பொழுது இதையனுசரித்து சிஷ்யன் கேட்க வேண்டிய கேள்விகளிருக்கின்றன; அவைகளாவன:— "அவித்வானும் (பிரம ஞானமில்லாதவனும்) இவ் வுலகத்திலிருந்து போய் அந்த லோகத்தைப் (பரமாத்மாவைச்) சேருகிறானா? அல்லது வித்துவான் மட்டுஞ் சேருகிறானா"? (இந்தக் கேள்விக்கு மறுமொழி சொல்வதற்காக மேல் கிரந்தம் ஆரம்பிக்கப்படுகிறது).

அந்த ஆத்மா, மிகுதியாக ஆவோம், உண்டாவோம், என்று இச்சித்தார்; சிருஷ்டிக்கிரமத்தையும் சிருஷ்டிக்கப்படவேண்டிய ஜகத்தை யுண்டுபண்ணுகிற விதம் முதலானதைப் பற்றியும் யோசித்தார்; அங்ஙனம் யோசித்து, இதோ காணப்படுகின்றவை, இன்னும் எவை யெவை யுண்டோ அவைகள் எல்லாவற்றையுஞ் சிருஷ்டித்தார்; அங்ஙனஞ் சிருஷ்டித்து அவற்றிலேயே பிரவேசித்தார்.

(இவ்விடத்தில் அவரே ஜகத்தாகப் பரிணமித்திருக்குங்கால் அவர் வேறாகவும் ஜகத் வேறாகவும் காட்டி அதில் அவர் பிரவேசித்தாரென எங்ஙனம் கூறற்பாலதாகும்? அசம்பாவித மென்று வாதித்துக் கடைசியில் பாஷ்யத்தில் சமாதானம் சொல்லப்படிருக்கிறது. அஃது யாதெனில்:— சர்வ விகற்பத்திற்கும் ஆஸ்பதமா யிருக்கின்ற நிர்விகல்ப வஸ்துவாகிய பிரமமானது பிராணிகளின் குஹையில் (பஞ்சகோசங்களின் வழியாய்) தோற்றப்படுகிறதென்பதை நிரூபிக்கவேண்டி ஜலத்தில் சூரியப் பிரதிபிம்பத்தை நாம் பார்க்குங்கால், சூரியன் ஜலத்தில் பிரவேசித்திருப்பதுபோல், பிராணிகளிடத்தில் அவர் பிரவேசித்திருப்பதாகத் தோன்றுதல்போலக் கற்பிக்கப்பட்டிருக்கிறதேயன்றி, ஜகத்வேறு போலும் தான் வேறு

போலவும், வீட்டில் ஓர் மனிதன் பிரவேசிக்கிறது போல ஜகத்தில் தான் பிரவேசித்ததாக பொருள்படுத்தக்கூடாது).

அப்படிப் பிரவேசித்து மூர்த்த வஸ்துக்களாயும், அமூர்த்த வஸ்துக்களாயுங் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வஸ்துக்களாயும், அப்படியல்லாத வஸ்துக்களாயும், ஆசிரய வஸ்துக்களாயும், அநாசிரய வஸ்துக்களாயும், புத்தியுள்ளவைகளாயும், இல்லாதவைகளாயும், வியூவகார சம்பந்தமான சத்திய வஸ்துவாயும், அந்தச் சம்பந்தமான பொய் வஸ்துவாயும், பாமார்த்த ஸத்திய வஸ்துவாயும், மற்றுமுள்ள யாவுமாயு மாகிவிட்டது. இதுவே ஸத்திய வஸ்து வென்று சொல்லப்படுகிறது. இவ்விஷயத்தில் இதனடியில் வரும் மந்திரம் உளது.

---

## அநுவாகம் VII.

"இந்த ஜகத், சிருஷ்டிக்கப்படு முன்னர் அஸத்தாக விருந்தது. (நாமரூப விசேஷத்தால் விகாரப்படாமல், அவ்வியாகிருத ரூபமாய், பிரமமாகவிருந்தது); அதினின்றும் ஸத் உண்டாயிற்று, (நாமரூப விசேஷத்தால் விகாரப்பட்ட வியாகிருத ரூபமான ஜகத் உண்டாயிற்று); அந்த அஸத், தன்னை ஸத்தாகத்தானே செய்து கொண்டது; ஆகையால் அது (பிரமம்) 'சுகிருத' மென்று சொல்லப்படும். (சுகிருதமென்றால் சுவயம் கர்த்தா, அல்லது புண்ணியம்)." என்று.

இது (இந்தப் பிரம வஸ்து) சுகிருதமாக விருப்பதால், ரஸமாய் (மாதுர்ய ரஸ பதார்த்தமாய்) இருக்கிறது; அந்த ரஸத்தை யடைந்தவனுக்கு ஆநந்த முண்டாகும்; அஃது ஹிருதயாகாசத்தில் ஆநந்த ரூபமாக விருக்கிறது. அஃது அங்ஙன மிராவிடில் பிராணுபாந விர்த்திகளை உண்டுபண்ணுவது யார்? அது உலகத்தைச் சுகப்படுத்துகிறது; எப்பொழுது ஒரு ஸாதகன் இத்தகைய காணப்படாததாயும், சரீர மில்லாததாயும், இன்னதென்று குறிப்பிட்டுப் பகரக்கூடாததாயும், குறிப்பிட இருப்பிடமில்லாததுமாயிருக்கிற ஆத்மா விடத்தில் அச்சமற்று (தைரியமாய்) தன்னை நிலைநாட்டுகிறானே அப்பொழுது அவன் அபயத்தை அடை

கிறான்; எப்பொழுது ஒருவனுக்குத் தான் வேறு, ஆத்மா வேறு என்ற பேத புத்தி உண்டாகிறதோ, அப்பொழுது அவனுக்குப் பயமுண்டு; அவன் தெரிந்தவனாக விருந்தபோதிலும் இவ்விதம் பேதமாய் எண்ணுகிறவனுக்குப் பயமுண்டு. (அதாவது ஜகத் யாவும் பயமுள்ளது). இவ் விஷயத்தில் இதனடியிற் கண்ட 'சுலோகமுளது.

## அநுவாகம் VIII.

" அவரிடமிருந்து உண்டாகிற பயத்தினால் காற்று வீசுகிறது; சூரியன் உதயமாகிறான்; அக்நியும் இந்திரனும், ஐந்தாவதாகிய மிருத்தியுவும் அவரவர் காரியங்களைச் செய்கின்றார்கள் " என்று.

(இவர்களெல்லோருஞ் சுவயம் ஈசுவரனாகவே விருந்தாலும் ஓர் பயத்தால் ஏவப்படுகிறார்கள்; அப் பயத்திற்குக் காரணம் ஆநந்த மாகிய பிரம வஸ்து; அந்த ஆநந்தம் எப்படிப்பட்டதென்று இங்கு சொல்லப்படுகிறது). ஆநந்தம் இப்பொழுது விசாரிக்கப்படுகிறது;

(விஷய விஷயி சம்பந்தமாயிருக்கிற லௌகிக ஆநந்தமா? அல்லது சுவாபாவிக மாகவுள்ள பிர்மாநந்தமா? வென்று. பிர்மாநந்தம் தெரிய வேண்டிய நிமித்தம், முதலில் உத்கிருஷ்டமாயும், பாஹ்ய அத்தியாத்மக சாதன சம்பத்தி நிமித்தியமாயுமிருக்கிற லௌகிக ஆநந்தம் எடுத்துக் கூறப்படுகிறது; பிரசித்தமாகவுள்ள இதையறிவதால், ஒழிவடைந்த விஷய புத்திக்கு கோசரமாயிருக்கிற பிர்மாநந்தத்தையறியக்கூடும்; லௌகிக ஆநந்தமும் பிரமாநந்தத்தினோர் அம்சம்; மனுஷ்யாநந்தம்முதல் தொடங்கி அதற்குமேல் உத்கிருஷ்டமான ஒவ்வொரு ஆநந்தத்தையும் எடுத்துக்காட்டி முடிவில் பிரமாநந்தம் சொல்லப்படுகிறது).

யௌவனம், சாதுத் தன்மை, வேதாத்தியயனம், ஏவல், திருட தைரியம், பலம், இப்பூமி முழுவதுமாளும்படியான சக்தி, பூர்ண திரவியம் முதலியனவுள்ள வோர் மனிதனுடைய ஆநந்தம் மானுஷ்யாநந்தமென்று கூறப்படும்; இவ்வாநந்தம் நூறு பங்கு கொண்டது மனுஷ்ய கந்தர்வனுடைய ஆநந்தம்; இவ்வாநந்தம் வேதார்த்தத்தை யறிந்தவனாயும், காமத்திற் கட்டுண் டுழலாதவ

னாயு மிருக்கிற பிரமவித்துக்கு முண்டு; (இங்ஙனம் இனிக் கூறப்படும் ஒவ்வொரு ஆநந்தமும் பிரம வித்துக்கு முண்டு); (மனிதனாயிருந்தபோதிலும், கர்மவித்தியா விசேஷத்தினால் அந்தர்தானாதி சக்தியுள்ளவனையும், சூக்ஷ்ம காரிய காரணனையும், கந்தர்வத்தை யடைந்தவனுமான மனிதனுக்கு, மனுஷ்ய கந்தர்வ னென்று பெயர். இப்படிப்பட்டவனுடைய சித்த ப்ரஸாதம் விசேஷாநந்தகாமாக விருக்கும்). இப்படிப்பட்ட ஆநந்தம் நூறு பங்கு கொண்டது தேவ கந்தர்வனுடைய (ஜாதி கந்தர்வனுடைய) ஆநந்தம்.

நீடூழிகாலம் பித்ருலோகத்திலுள்ள பித்ருக்களுடைய ஆநந்தம் அதிலும் நூறு மடங்கு கொண்டது; ஸ்மார்த்த கர்ம விசேஷத்தால் தேவர்களின் ஸ்தானத்தில் வந்தவர்களுடைய ஆநந்தம் அதனிலும் நூறு மடங்கு கொண்டது; அக்நிஹோத்திராதி வைதிகக் கர்மத்தால் தேவத்துவத்தை யடைந்தவர்களுடைய ஆநந்தம் அதிலே நூறு மடங்கு கொண்டது; ஹவிஸைப் புசிக்கிற முப்பத்து மூன்று தேவர்களுடைய ஆநந்தம் அதில் நூறு மடங்கு கொண்டது; மேற்படி தேவர்களுக்குப் பதியாயுள்ள இந்திரனுடைய ஆநந்தம் அதில் நூறு மடங்கு கொண்டது; இந்திரனுக்குக் குருவாயுள்ள பிரஹஸ்பதியினுடைய ஆநந்தம் அதில் நூறு மடங்கு கொண்டது; பிரஜாபதியினுடைய (திருலோகச் சரீரியாகிய, விராட்புருடனுடைய) ஆநந்தம் அதில் நூறு மடங்கு கொண்டது; பிரமத்தினுடைய (ஸூத்திராத்மாவுடைய) ஆநந்தம் அதில் நூறு பங்கு கொண்டது. அந்தப் பிரமம் புருஷனிடத்தில் இருதய குஹையி லிருக்கிறது; ஆதித்திய னிடத்திலிருக்கிறது; இப்படி யறிந்தவன் இந்த லோகத்தை (தேகத்தை) விட்டு, இந்த அன்னமயமான ஆத்மாவைக் கடக்கிறான்; (அன்னமயகோசத்தை முதலில் அறிந்து, அதை ஆத்மா வல்ல வென்று தள்ளிவிடுகிறான்). அப்படியே, பிராண மயம், மனோ மயம், விஞ்ஞான மயம், ஆநந்த மயம் இவைகளைக் கடக்கின்றான்; இவ்விஷயத்தில் அடியில் கண்ட சுலோகம் இருக்கிறது.

## அநுவாகம் IX.

"எதினிடத்தி னின்றும் வாக்குகள் மனத்துடன் (விக்ஞானத்துடன்) எட்டாமல் திரும்பி விடுகின்றனவோ, அந்தப் பிரமத்தை யறிந்த வித்துவானுக்கு எதிலிருந்தும் பயமில்லை" என்று; இப்படிப்பட்ட வித்துவானை, புண்ணியஞ் செய்யாமையும் பாபஞ் செய்தலும் அவதிக்குட்படுத்தமாட்டாது; ஏனெனில், இப்படி யறிந்த வித்துவான் புண்ணியம், பாபம் இவ்விரண்டையுந் தன் னாத்மாவாகப் பார்க்கிறான்; அதாவது, தான் மாத்திரம் எஞ்சிநின்று, மேற்படி இரண்டையுந் துவம்ஸஞ் செய்கிறான்; இதுதான் உபநிஷத் (ரஹஸியம்).

"ஸஹநாவவது" என்ற சாந்தி சொல்லப்படுகிறது.